Regd. No. M. 4593. KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

மலர் 18 ஈரோடு, 17-3-1945 பங்குனி-மீ 4உ இதழ் 23

## பெரியார் சுற்றுப்பிரயாணப் பேச்சு

பெரியார் ஈ. வெ. ரா. காஞ்சீபுரம், நன்னிலம், தஞ்சை ஆகிய இடங்களில் பன்னீர்ச்செல்வம் நாளில் பேசியபேச்சின் தொகுப்புகள்,

### காஞ்சீபுரம்

காஞ்சீபுரத்தில் 6-3-45ந் தேதி செங்கல்பட்டு ஜி.போ.தலைவரும், சென்னை மாவட்டத்திராவிட கழகத் தலைவருமான தோழர் டி. ஷண்முகம் அவர்கள் தலைமை வகித்தார். ஒலிபெருக்கி வைக்கப்பட்டிருந்தது. 4000 மக்கள் கூடி இருந்தனர். தோழர்கள் சுப்பிரமணியம், தங்கவேலு முதலியார், ரங்கசாமி நாயக்கர் முதலியவர்களும், பெரியாரும் பேசினார்கள்.

### நன்னிலம்

9-3-45ந் தேதி நன்னிலத்தில் பெரியார் ஊர்வலமாக பஞ்சாயத்து போர்ட் ஆபீசுக்கு அழைத்துச்செல்லப்பட்டு அங்கு பஞ்சாயத்து போர்டாரும், நன்னிலம் வர்த்தக சங்கத்தாரும் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்தார்கள், பஞ்சாயத்துப் போர்டு வரவேற்புக்குப் பதிலளிக்கையில் இந்த நாட்டில் ஸ்தலஸ்தாபனங்கள் என்று சொல்லப்படும் ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி முதலியவைகளில் நீங்கள் குறித்து இருப்பது போல் எனக்கு அனுபவம் உண்டு என்றும் அந்த ஸ்தாபனங்கள் வரவர பெரிதும் பொறுப்பற்றும் நாணயக் குறைவாயும் நடந்து வந்து தனது அதிகாரத்தையும் கௌரவத்தையும் நாளுக்கு நாள் குறைத்துக் கொண்டு வருகிறது என்றும் அதற்குக் காரணம் இந்த நாடு பல லட்சியங்களுக்கு பல இன நல உணர்ச்சிக்கு ஆளாகி ஒவ்வொரு கூட்டமும் தன் சுய நலத்துக்கேயும் தங்கள் கட்சி நலத்திற்கேயும் பாடுபட ஆரம்பித்ததே காரணம் என்றும், இவை இன்று கண்டிப்பாக சீர்திருத்த முடியாததாக ஆகிவிட்டன என்றும் இவைகளைக் கலைத்து சர்க்கார் நேர்ப் பார்வையிலாக்கி பொறுப்பை பொதுப்புக்கு ஆளான (சம்பளம் பெறும்) அதிகாரி வசம் விட்டு நடத்தவேண்டும் என்றும், தூது இன்று சில அரசியல் தலைவர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் சர்க்காரும் இதை உணர்ந்து அப்படியே செய்ய முற்பட்டு சிறிது சிறிதாக செய்து வருகிறார்கள் என்றும், தான் முனிசிபல் சேர்மென், ஜில்லா போர்ட் மெம்பர், தாலூகா போர்டு மெம்பர் ஆகிய ஸ்தானங்களை ஒன்றாய் ஒரே நாளில் ராஜிநாமாக் கொடுத்ததற்குக் காரணம் இதுவும் ஒன்று என்றும், அதுமுதல் இன்றுவரை இந்த ஸ்தாபனங்கள் இன்றைய பொது மக்கள் இடம் இருக்கக்கூடாது என்றே சொல்லி வருவதாயும் சொன்னார்.

இந்த ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடக்குமானால் போலீசு, நீதிபதிகள் ஆகிய இலாகாக்களும், வர்த்தகம் கூட்டுறவு தொழிற்சாலை, ரயில் போக்குவரவு ஆகிய இலாகாக்களும் இந்த ஸ்தாபனத்தின் மூலமே நடத்தி சொத்து வரியே இல்லாமல் லாபத்திலேயே சர்க்கார் நடத்தப்படக்கூடும் என்றும் விளக்கிக்காட்டினார்.

பின்னர் வியாபாரிகளின் வர்த்தக சங்க வரவேற்புக்குப் பதிலளிக்கையில் நம்நாட்டு வர்த்தக சங்கத்திற்கு மதிப்பு இல்லை என்றும், அது சர்க்கார் தொடர்பால் சிலர் கொள்ளை அடிக்க அமைத்துக்கொள்ளப்பட்ட ஸ்தாபனமாக ஆகி வருகிறதே தவிர மக்களுக்கு பயன்பட அதில் அம்சங்கள் அரிது என்றும், நம் நாட்டு வர்த்தகர்களில் அனேகருக்கு பெரிதும் நாணயத்தில் கவலை இல்லை என்றும், மேல் நாட்டு வர்த்தகர்களிடத்தில் உள்ள நாணயத்தால் வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்கும் லாபமும் சவுகரியமும் உண்டு என்றும், ஒரு சிறு குழந்தை சாமான் வாங்கச் சென்றாலும் சீட்டைக் கொடுத்து சாமானையும் பில்லையும் உடனே வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டு கவலையற்று வரும் என்றும், ஒரு சிறு பிசகும் இருக்காதென்றும், இடை, குணம், விலை சரியாய் இருக்கும் என்றும், அங்கு நாணயக் காரர்களுக்குத்தான் கௌரவமென்றும் இங்கு புரட்டுக்காரர்களே—புரட்டின் சக்திக்குத் தக்கபடி கொள்ளை அடிக்கவே வியாபாரம் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறதென்றும், புரட்டுக்கார வியாபாரிக்குத்தான் இங்கு நல்ல பேர் என்றும், இந்த 40 வருஷ காலத்தில் வியாபாரம் முன்னையைவிட துரோகமும் திருட்டும் கலந்த தொண்டாக ஆகிவருகிறதென்றும், நாணயத்தின் அருமையும் சௌகரியமும் திருப்தியும் நம் மக்களுக்கு விளங்கவில்லை என்றும், நாணயத்தில் லாபமும் பெருமையும் இருக்கிறதென்றும், நான் நாணயத்தை ஒரு கொள்கையாகக் கொள்ளுங்கள் என்றுகூடசொல்ல வரவில்லை என்றும் அதை மகான்களுக்கு விட்டுவிடுகிறேன் என்றும், நான் சொல்லுவது உங்கள் லாபமே உங்கள் வியாபாரக் கொள்கையாக இருக்கட்டும் என்றும் ஆனால், அதன் வெற்றிக்கு உண்மையான நாணயம் ஒரு திட்டமாக இருக்கட்டும் என்றும், இது ஒரு தந்திரமென்றும் இந்தத் தந்திரம் நான் 10 வயதில் வியாபாரத்தில் புகுந்த காலமுதல் கண்டு அனுபவித்து வந்தவன் என்றும், என் தகப்பனார் உண்மையான நாணயத்தைத் திட்டமாக வைத்து மற்றவர்களை அதிக லாபம் சம்பாதித்து நல்ல பலன் அனுபவித்து வர்த்தகத் துறையில் நல்ல பெருமை பெற்று பலருக்கு வழிகாட்டி இருக்கிறார் என்றும், இன்று அதில்லாததால்தான் வர்த்தகத் துறை பொது மக்களுக்கு கோர்ட்டுகள், வக்கீல்கள், தாசில்தார்கள், ஆகியவர்கள் போல் ஒரு தொல்லையும் ஏமாற்றமும் கொடுக்கும் ஸ்தாபனமாக ஆகிவருகிறதென்றும், அதனாலேயே பொது வாழ்வில் இவர்கள் எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் இவர்களுக்குப் போதிய மதிப்பு இல்லை என்றும், சர்க்காரும் சர்க்கார் சிப்பந்திகளும் இவர்களுக்கு ஒரு வக்கீலுக்குக் கொடுக்கும் மரியாதைகூட கொடுப்பதில்லை என்றும் கூறினார்.

பின் சந்தனம், மலர், வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டது.

பிறகு அங்கிருந்து ஊர்வலமாக ஆற்று வெளியில் போடப்பட்டிருந்த சோற்பொழிவு கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தோழர் ரத்தின சபாபதி செட்டியார் அவர்கள் தலைமையில் கூட்டம் துவக்கப்பட்டது, 3000-பேர்களுக்குமேல் வந்து கூடி இருந்தார்கள். பெண்கள் 150 பேர்களும் மற்றும் உள்ள எல்லா அதிகாரிகளும், மிராசுதாரர்களும் வந்திருந்தார்கள்.

அங்கு தோழர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஷம்சுதீன், பாலசுந்தரப்பாவலர, சவுரிராஜன் ஆகியவர்கள் பேசியபின்பு பெரியார் ஈ. வெ. ரா. $2\frac{1}{2}$ மணி நேரம் பேசினார்.

பிறகு மறுநாள் காலை (10-3-45) நன்னிலமிருந்து புறப்பட்டு தஞ்சை வந்து சேர்ந்தார்.

தஞ்சையில் 10ந் தேதி மாலை 6-மணிக்கு நாடார் மைதானத்தில் திருச்சி தோழர் டி. பி. வேதாசலம் அவர்களது தலைமையில் ஒலி பெருக்கியுடன் ஒரு மாபெரும் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. சுமார் 5000 மக்களுக்கு மேலாகவே கூடி இருந்தார்கள். தோழர் வ. குமாரசாமிப்பிள்ளை முதலிய பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

பெரியார் $1\frac{1}{2}$ மணி நேரம் பேசிவிட்டு வாய்ப் புண் வலிக்கிறதென்று உடனே ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.

மேல் கண்ட மூன்று இடங்களில் கூடிய பொதுக் கூட்டங்களிலும் பெரியார் ஈ. வெ. ரா. பேசிய பேச்சின் தொகுப்பு.

### பெரியார் பேச்சு

தலைவர்களே, தாய்மார்களே, நம் அரும்பெரும் தலைவர் பன்னீர் செல்வம் அவர்களின் ஞாபகார்த்தமாக இந்த வாரம் பல இடங்களில் இப்படிப்பட்ட கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இதைப் பற்றி பேசும் முன் யுத்தத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தை பேசுகிறேன்.

இன்று யுத்தம் நல்ல நிலையில் நமக்கு வெற்றி அளித்து வரும் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது. வெற்றி நிச்சயம். யுத்தத்தில் நாம் பாக்கியசாலிகள். யுத்த காலத்தில் நம்மவர்களால் நமக்கு ஏற்பட்ட சில தொல்லைகளைத் தவிர மற்றபடி நமக்கு அதிகத் தொல்லை இல்லை. யுத்தத்தில் கலந்த நாடுகள் ஜர்மனி, ரஷ்யா, இத்தாலி, பிரான்சு, இங்கிலாந்து, போலந்து, கிரீஸ், ஜப்பான், சைனா, பர்மா, சிங்கப்பூர் முதலிய அனேக நாடுகள் ஆயிரம் ஆயிரம் கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவும், லட்சக் கணக்கான மக்கள் சேதமும், அவரவர்கள் நாடு நாசமும் ஆகிய பல அவதிகள் அடைந்தன. நமக்கு ஒன்றும் இல்லை. நாம் சவுக்கியமாக இருக்கிறோம். இசொல்லப்போனால் யுத்தத்தின் பயனாய் வியாபாரிகள் இராசவாதம்போல் பொருள் சேர்த்தார்கள். நகர மக்கள் வாழ்க்கைத்தரம் 4 வருஷத்தில், 25 வருஷத்திய உயர்நிலைக்கு வந்துவிட்டது. கிராமவாசிகளில் பலருக்குத் தொல்லை இருக்கிறது என்பது உண்மை என்றாலும் கிராமத்தான்-நகரவாசிக்காக இருக்கிறான், இருக்கவேண்டியவன் என்கின்ற நிலைமை மாறி கிராமமும் நகரமாகும் வரை இந்தக் கஷ்டத்தை அடியோடு ஒழித்துவிடுவது என்பது இலேசான காரியமல்ல.

(தொடரும்)

## மாணவர்காள்!

(குடந்தை எஸ். கருணானந்தம்)

என்னாட்டு மாணவர்காள்! இளவீரர்காள்!
என்னருமைத் தோழர்காள்! எதிர்காலத்தில்
இந்நாட்டைப் பொன்னாடாய் எழுப்பப் போகும்
எழில் உலகச் சிற்பிகளே! இந்த உலகின்
பன்னாட்டுச் சரித்திரமும் பண்பும் கற்றுப்
பார்ப்பனரின் சூழ்ச்சியினால் தாழ்ச்சியுற்ற
நம் நாட்டை நன்னிலைக்கு மாற்றற் கேற்ற
நன்முறைகள் நாடிடுவீர் நலிவு நீங்கி!

அழகுள்ள திராவிடத்தை ஆர்யமென்ற
அஞ்ஞான மூடுபனி சூழ்ந்ததாலே,
சுழலுற்ற துரும்பென்ன அடிக்கின்றார்கள்
தூயமனத் திராவிடர்கள், துயரம் நீங்கக்
கழகங்கள் கண்டிடுவீர், கற்றோரெல்லாம்
கல்லாத மக்களுக்குக் கல்வி சொல்லிப்
பழகுங்கள் பார்ப்பனரின் சூதைக் கற்கப்
பழிகள்முதல் தீமையெலாம் பறந்து போகும்.

இக்காலக் கல்விமுறை ஏற்றதல்ல,
எத்துறையும் உண்மைதனைச் சொல்வதில்லை;
பிற்காலக்கலைகளெலாம் பித்தலாட்டம்,
பேதமுறை வளர்ப்பனவே பெரிய நூல்கள்;
எக்காலச் சரித்திரமும் பூமி நூலும்
எட்டுணையும் சரியல்ல, இயம்பப்போனால்
தற்காலத் தமிழர்களை இந்தத் திட்டம்
தவறான வழிதனிலே சாய்த்துச் செல்லும்!

ஆரியர்கள் மட்டுமல்ல அறிவழித்தோர்
ஆசிரியர் கூட்டமுந்தான் அந்த வாறே;
வீரியத்தை, வெற்றியினை, வேந்தர் தம்மை,
வீழ்த்திவந்தார் புரோகிதர்கள், குருக்கள் மார்கள்
காரியத்தில் ஜெயம்பெருகக் கண்ட பின்னர்
கடவுளெனும் கல்லதனை விடாமற் கொண்டார்;
சீரியநல் மாணவர்கள் சேர்ந்து வாரீர்
செப்பனிட்டு நம்வழியைச் சீராய்ச் செய்வோம்.

புவனகிரி திராவிட கழகத் தலைவர் தோழர் கே. நமசிவாயம் அவர்களின் சிறிய தாயார் குப்பம்மாள் 7-2-45-ந் தேதி மாலை 6 மணிக்கு இயற்கையெய்தினார்.

### தோழர் ஆர். பி. ஆதிநாராயணன்

ராஜபாளையம் நகரசபையின் 4வது வார்டுக்கு நடந்த உபதேர்தலில் தோழர் ஆர். பி. ஆதிநாராயணன் பிரதிநிதியாகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

### பிறப்பு

பம்பாய் தாராவி அரசர்குலம் பொதுவாதரா கழகத்திற்கு கௌரவகாரியதரிசி தோழர் அ. சு. சண்முகத்திற்கு 3-1-45 தேதி ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 16-1-45தேதி சடகோபன் என்று பெயரிடப்பட்டு தாயும் சேயும் சுகமாகயிருக்கிறார்கள். இதன் நினைவாக 'குடி அரசு' வளர்ச்சிக்கு ரூ.1 நன்கொடையளிக்கப்பட்டது.

## சென்னை மாவட்ட திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாடு

1-4-45 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு செயிண்ட் மேரீஸ் மண்டபத்தில் ஆரம்பம்.

தலைவர்: திருச்சி நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் என். சங்கரன்.

திறப்பாளர்: குமாரபட்டக்கார் தோழர் என். அர்ஜுனன்.

கொடியேற்றுபவர்: தோழர் பேரூர் சுப்ரமண்யம்.

நடராசன்—தாலமுத்து படத் திறப்பு: தோழர் விருதுநகர் ஆசைத்தம்பி.

பெரியார் ஈ. வெ. ரா., தளபதி அண்ணாதுரை, டி. சண்முகம், பாரிஸ்டர் ரங்கராமாநுஜம், கோலார் ஆதிமூலம், ஜே. எஸ். கண்ணப்பர், அன்பழகன், ஜனார்த்தனம், ஈ. வெ. கி. சம்பத், இந்திராணி பாலசுப்ரமண்யம் பேசுவார்கள்.

வரவேற்புக்கட்டணம் ரூபாய் 1, நுழைவு 0—4—0

தோழர்கள் என். ஜீவரத்தினம், வரவேற்புத்தலைவர்; சி. கணேசம் விளம்பர அதிகாரி; எம். கிருஷ்ணன், எம். கே. டி. சுப்ரமண்யம் காரியதரிசிகள்.

## வீரர்கள் தாலமுத்து—நடராஜன் ஞாபகார்த்த கட்டிடம்

2-4-45ந் தேதி திங்கள் மாலை 6-மணிக்கு, சென்னை மூலகொத்தளம் மயான மைதானத்தில், தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. திறந்து வைப்பார்கள். அனைவரும் வருக.

## சென்னை சுயமரியாதைச் சங்க நிதிக்காக

29-4-45 ஞாயிறு மாலை 6மணிக்கு செயிண்ட்மேரீஸ் மண்டபத்தில் தளபதி C. N. அண்ணாதுரை M. A., மற்றும் பல தோழர்களும் நடிக்கப்போகும் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடக டிக்கட்டுகள் சென்னையின் பல பாகங்களிலும் விற்பனையாகி வருகின்றன. முந்துங்கள். கட்டணம் ரூ. 5½, 2½, 1-8-0, அணா 9.

காரியதரிசி,
சென்னை சுயமரியாதைச் சங்கம்.

## சென்னை திராவிடர் மாநாடு

### வரவேற்புக் கமிட்டிக் கூட்டம்

24-3-45 சனி மாலை 6½ மணிக்குப் பெத்துநாயக்கன்பேட்டை வாயர் சின்னதம்பி தெரு, 4. A. மாடியில் நடைபெறும். உறுப்பினர்கள் யாவரும் இதையே அழைப்பாகக் கருதி தவறாமல் வரவேண்டுவதுடன், மாநாட்டிற்குத் தீர்மானம் அனுப்புவோர் 27-3-45-ந்தேதிக்குள் அனுப்பிவிட வேண்டுகிறோம்.

காரியதரிசிகள்.

## எமது நன்றி

4-3-45 ஞாயிறன்று சென்னை, பெரம்பூரில் தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையிலும், பெரியார் ஈ. வெ. ரா. மற்றும் பல அறிஞர்கள் முன்னிலையிலும் நிகழ்ந்த எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தை பாராட்டியும், வாழ்த்தியும் வந்திருந்து சிறப்பித்தும், வாழ்த்துரை வாழ்த்துப்பா வழங்கியும் மகிழ்வித்த பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும், கழகத்தினர்க்கும், திராவிட நாட்டினர் யாவருக்கும், அன்புறும் நன்றியறிதலான வணக்கத்தை தனித்தனியே அறிவிக்க முடியாததால் நம் 'குடி அரசு' இதழ் மூலமாய் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கணேசன்-சண்பகவல்லி.

இத்திருமணத்தை முன்னிட்டு 'குடி அரசு'க்கு ரூ. 1. நன்கொடையளிக்கப்பட்டது.

## "போர்வாள்"

வேலூர் தோழர் சி. பி. சின்னராசு அவர்களை அமைப்பாளராகக்கொண்ட, திராவிட சீர்திருத்த நாடகக்குழுவினரால் இராசிபுரம் (சேலம் ஜில்லா) ஓரியண்டல் தியேட்டரில் 1-4-45முதல் "போர்வாள்" நாடகம் ஆரம்பமாகிறது.

## விற்பனைக்கு தயார்

"பார்ப்பனர் சூட்சி விளக்கம்" என்கிற பாட்டு புஸ்தகம் விற்பனைக்குக் கிடைக்கும். டிம்மி சைஸ் 9-பக்கங்கள் கொண்டது. ஒரு புஸ்தகம் வேண்டுவோர் மூன்று அணா தபால் தலைகள் அனுப்பவும். விலாசம்:-

S. சோமசுந்தரம், செயலாளர்,
திராவிடநாடு காகிததொழிற்சாலை,
ஒட்டக்குடி, தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சி.

## தமிழிசைப் போட்டி

பன்னீர்செல்வம், நாகம்மாள் நினைவு நாளை முன்னிட்டு மார்ச் மாதம் கடைசி வாரத்தில் ஈரோட்டில் ஓர் போட்டி நடைபெறும். ரூ. 25 பெருமானமுள்ள வெள்ளிக் கோப்பை முதற் பரிசாகவும் ரூ. 10 பெருமானமுள்ள வெள்ளிக் கோப்பை 2-ஆம் பரிசாகவும் வழங்கப்படும். பிரவேசக்கட்டணம் இல்லை. சேர விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவும்.

முகவரி:

எஸ். ஆர். சந்தானம், காரியதரிசி, கோவை ஜில்லா திராவிடர் கழகம், ஈரோடு.

P. பழனிச்சாமி, S. R. சந்தானம்,
செயலாளர்கள்.

## காரைக்குடி

### இராமநாதபுரம் மாவட்ட முதலாவது திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு

21-1-45-ந் தேதி தேர்ந்தெடுத்த வரவேற்புக் கமிட்டித் தலைவர் செயலாளர் இருவரும் தாங்களாகவே தங்கள் பதவிகளினின்றும் நீங்குவதாகத் தந்த கடிதங்களை 22-2-45-ந் தேதி கூடிய வரவேற்புக் கமிட்டிக் கூட்டத்தில் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டு அப்பதவிகளுக்குத் தோழர்கள் செ. அருணாசலம் தலைவராகவும், சி. பெரி. சி. மெய்யப்பா, சா. இராமசாமி முதலியவர்கள் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். டி. மாநாடு 8-4-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணா டாக்கீஸில் நடைபெறுமெனத் தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
வரவேற்புக் கமிட்டியார்.

## அறிவிப்பு

24-2-45-ந் தேதி 12-ஆம் பக்கத்தில் 'பிரிவினை ஆதரிப்பு மாநாடு' என்ற தலைப்பின் கீழ் என்னுடைய பெயரும் வவ்வாலடி தோழர் சங்கதின் அவர்கள் பெயரும் போடப்பட்டிருந்தது. ஆனால் அதற்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன் என தோழர் திருவாரூர் வி. ஜி. ரெங்கராசு எழுதுகிறார்.

## மண மக்கள் நன்றி

21-2-45-ல் சென்னையில், திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் நாங்கள் செய்து கொண்ட வாழ்க்கை ஒப்பந்தத்தைப் பாராட்டியும், வாழ்த்தியும், வந்திருந்து சிறப்பித்தும், வாழ்த்துரை வழங்கியும், வாழ்த்துப்பா நல்கியும், மன மகிழச்செய்த, பெரியோர்களுக்கும், தோழர்களுக்கும், கழகத்தாருக்கும், திராவிட நாட்டினர் யாவருக்கும், தனித் தனியே, நன்றி தெரிவிக்க இயலாததால், இக் 'குடி அரசு' மூலம், எங்களது மனமார்ந்த நன்றி பதிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வெற்றிச்செல்வி,
க. அன்பழகன்.

## சேலம் கல்லூரி டென்னிஸ் பந்தயம்

இவ்வாண்டு கல்லூரி டென்னிஸ் சிங்கில்ஸ் பந்தயத்தில், நமது இயக்கத் தோழரும் கல்லூரி மாணவருமான தோழர் ஜி. கெச். கோதண்டராமன் வெற்றி பெற்றார்.

## சாக்கோட்டை சுயமரியாதைச் சங்கம்

ஷை சங்கத்தின் 11-வது ஆண்டு 31-3-45-ந் தேதியுடன் முடிவடைகிறது. 11-வது ஆண்டு அறிக்கை முடிக்கவேண்டியிருப்பதால், ஷை தேதிக்குள் சங்க அங்கத்தினர்கள் தங்கள் சந்தா பாக்கியைக் கொடுத்துதவ வேண்டப் படுகிறார்கள்.

காரியதரிசி.


திராவிடநாட்டிற்கோர் நற்செய்தி!
கனக விசயரின் பழிப்பு!
சேரமன்னனின் அதிர்ப்பு!
கல்லலை சுமக்கும் காட்சி!
கண்ணகி விழாவின் மாட்சி!
இன்னும் பல அரிய கட்டங்களடங்கிய
'சேரன்-செங்குட்டுவன்'
நாடகம்
சின்னசேலம் கலாமணி நாடக
மன்றத்தாரால்
நம் ஒப்பற்ற தலைவர்
பெரியார் ஈ. வெ. ரா. தலைமையில்
அதிவிரைவில் ஆரம்பிக்கப்படும்.
இடம்? தேதி?
எதிர்பாருங்கள்.
கதை, வசனம், பாட்டு, டைரக்ஷன்
G. R. கலாமணி



## பெரியாரின் பேட்ஜ்

★

நமது தலைவரின் உருவம் அமைந்த பேட்ஜ் அழகிய கலரில் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0-1-0. தேவைக்கு எழுதுக. தக்க கமிஷனுக்கு நமது இயக்க எல்லா பத்திரிகை ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

திராவிடன் பதிப்பகம்,
133-லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)


## தஞ்சை ஜில்லா முக்குலத்தோர்களுக்கு ஓர் அறிவிப்பு

ஒரே குலம்; ஒருவனே தேவன் என்று இணைபிரியாது வாழ்ந்து அரசுபுரிந்து வந்த மூவேந்தர்களின் மரபினரான கள்ளர், மறவர், அகம்படியர் என்ற மரபினரே முக்குலத்தோர்கள். தற்பொழுது சென்னை மாகாணத்தில் முக்குலத்தோர் மாத்திரம் இருநூற்றி ஐம்பது லெட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இன்று நம் குலத்தோர் இன ஒற்றுமை அற்று, அன்பு என்பது மறந்து, திருமண முறை மாறி, கடவுள் வழிபாடு முறை மறந்து, கண்டது காட்சி கொண்டது கோலம் என்று ஒரு இனத்தவரை அந்த இனத்தவரே தாக்குவதுமான முறைகள் ஏற்பட்டு நமது பண்டைத் தமிழ் மொழி மறைந்து வடமொழியைக் கைக்கொண்டு, நம் பண்டைத் தமிழ் வீரம் மறைந்து, தாழ்த்தப்பட்டவர்களாய் அடங்கியிருந்து நம் தமிழ்நாட்டில் குடியேறிய ஒரு கூட்டத்தாரால் நம்மை சூத்திரன், குச்சிக்காரி மகன், சூத்திரச்சி, குச்சிக்காரி மகள், என்ற பெயர் வழங்குவதுடன், நம் வழிபடும் ஆலயங்களுக்குச் சென்றால், அங்கு நமக்கு கட்டுப்பாடுகள். அரசியலில் நம் இனத்தவர்கள் அடைந்த துன்பங்களும், பட்ட அவமானங்களும் சொல்லத் தரமல்ல. ஆகையால் நாம் இன்று செய்கையில் செய்யவேண்டிய செய்கை எப்படி முஸ்லிம்களுக்கு அவர்கள் ஜாதி சங்கமான லீக் இருக்கிறதோ அதேபோல் நமக்கு முக்குலத்தோர் கழகம் என்று ஒன்று அவசியம் ஏற்படுத்தவேண்டும். ஏற்படுத்தி மற்ற ஜில்லாவான ராமனாதபுரம் மதுரை போன்ற இடங்களில் இருப்பதுடன் நாமும் சேர்ந்து நமது ஒழுக்கத்திற்கு ஒரு கடவுளை வணங்கவேண்டிய நாள் நமது கல்விமுறை பதவியில் நமது விகிதாசாரத்திற்குத் தக்கபடி பதவி இவைகள் அவசியம் நமக்குத் தேவையாயிருப்பதால் இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் இதற்கு ஆகவேண்டிய கூட்டங்களும் மாநாடுகளும் நடத்தவேண்டியது.

நமது இனம் விடுதலை பெற்ற பின்னே பொருளாதார விடுதலையோ, அரசியல் விடுதலையைப் பற்றியோ, நாம் யோசிப்போம். நமது கழகத்தில் முஸ்லிம், கிருஸ்துவர், பார்ப்பனர் தவிர மற்ற எல்லோரும் நம்மவர்களே. நம்மில் இருந்து பிறந்தவர்களே. ஆகையால் ஆங்காங்கு விரைவில் கழகம் அமையுங்கள்.

இங்ஙனம்,
முக்குலத்து வாலிபர்கள்.

## திராவிட பகுத்தறிவு எழுத்தாளர் மாநாடு

திராவிட எழுத்தாளர் என்ற பெயரால் கோவையில் நடத்துவதாக தோழர் பண்டிட் ஜயலக்ஷ்மி அவர்களால் அறிவிக்கப் பட்டிருந்த மகாநாடு "திராவிட பகுத்தறிவு எழுத்தாளர் மாநாடு" என்ற பெயரால் வருகிற ஏப்ரல் மாதக்கடைசியில் நடத்துவதென ஈரோட்டில் பண்டிட் ஜயலக்ஷ்மி அவர்களின் முயற்சியால் 13-3-45-ந் தேதி கூட்டப்பட்ட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற விபரங்கள் அடுத்த அறிக்கையில்.

## எங்கள் வணக்கம்

21-2-45 புதனன்று காயல்பட்டில் நடந்த எங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்திற்கு ஆசிச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எங்கள் வணக்கம்.

வ. கே. பாஷா—முகம்மூதா பேகம்,

ரோஜா முத்தையா

## மாணவர்களுக்கு வேண்டுகோள்

மாணவர் தோழர்களே!

சென்ற ஆண்டு கோடை விடுமுறையிலும், இவ்வாண்டு தசரா விடுமுறையிலும் நமது தோழர்கள் நாடு சுற்றி நம் இயக்கக் கருத்துக்களை விளக்கி, பல ஆரியக் கோட்டைகளை அதிரச்செய்து, திராவிடரைத் தட்டியெழுப்பி நல்ல பணி செய்தார்கள். இன்று அதன் பலனாகப் பல மாவட்ட மாநாடுகளும், மண்டல மாநாடும் நமது திராவிட மாணவர்கள் நடத்தினார்கள். ஏனைய மாணவ இயக்கங்களில் நமது மாணவர்கள் முன்போல் ஏமாற்றப்பட்டு இச்சைப்பாவையாய் உபயோகப் படுத்தல் குறைந்துவருகிறது; நமது மாணவர்களிடை ஏற்பட்டுள்ள இன உணர்ச்சியின் காரணமாக.

சென்ற சுற்றுப் பிரயாணங்களில் கலந்து கொண்ட மாணவர்களும், புதிய மாணவர்களும் இம்முறை கலந்து கொண்டு இச் சுற்றுப்பிரயாணத்தை வெற்றிகரமாய் நடத்தவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம். இம்முறை கலந்து கொள்ளும் மாணவர்கள் உடனே தங்கள் பள்ளியின் விடுமுறை ஆரம்ப நாளையும், விடுமுறை முகவரியையும், பிற வசதிகளையும் எழுதியனுப்பக் கேட்டுக் கொள்கிறோம்.

பெரியாரவர்கள் ஓய்வு எடுக்கவேண்டியிருப்பதால் கடமையுணர்ந்த மாணவர்கள் கட்டாயம் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

செயலாற்றும் செம்மல்களே வருக! வருக!!

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக் கழகம்,
ஈரோடு.

* *

திராவிடப் பெருமக்களே!

சென்ற விடுமுறையில் தங்கள் ஊர்களுக்கு மாணவர்களை அழைத்து கூட்டங்கள் ஏற்பாடு செய்தும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தமைக்கும் மீண்டும் எங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு இம்முறையும் தங்கள் அழைப்புகளை உடனே அனுப்பியுதவக் கேட்டுக் கொள்கிறோம். இம்முறை இரண்டு மாதங்களுக்கு நகரங்களிலும், கிராமங்களிலும் கூட்டங்கள் ஏற்பாடு செய்து உதவும்படியாய் கேட்டுக்கொள்கிறோம்.

* *

பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடைய புகைப்படம் (ஒரிஜினல்) எந்த அளவில் வேண்டுமாயினும் அழகிய அச்சிட்ட மவுண்டுடன் கிடைக்கும்.

அஜாக்கிரதையாகப் பேசுவதை நிறுத்தி

போராடும் நமது வீரர்களுக்கு பாதுகாப்பளியுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியத்திற்கு" என்று குறிப்பிட்டு

# மே. த. கவர்னர் யுத்த நிதிக்கு

மீண்டும் பணம் கொடுத்துதவி அவர்களுக்கு நலன் தேடுங்கள்.

## சுயமரியாதை போதனாக் கல்லூரி

(Self-respect Tutorial College)

சுயமரியாதைப் போதனாக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டுள்ளது. அது ஏப்ரல் 15-ஆம் நாள் தொடக்கப்படும். தபால் மூலமாகவும் நேரிலும் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி மேடையிற் பேசும் ஆற்றல் பெறுவதற்கான வழிகளை வினா விடை வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும் அளிக்கப்படும். அதன் விபரம் தெரிய விரும்புவோர் தபால் தலையுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரின்சுபால், சுயமரியாதை போதனாக் கல்லூரி, ஈரோடு.

---

[illegible] விபரம் தேவையானவர்கள் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
திராவிடமாணவர் பிரசாரகழகம், ஈரோடு.

## வடசெங்கற்பட்டு ஆதி திராவிட முதல் மாநாடு

ஷை மாநாடு பொன்னேரி ஆதிதிராவிட மாணவர் ஹாஸ்டல் கட்டிடத்தின் முன் 25-3-45-ந் தேதி தோழர் சி. தங்கராஜ் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் பி. எம். வேலாயுதபாணி திறந்துவைப்பார். தோழர் வி. வி. முருகேச பாகவதர் கொடியேற்றுவார்.

## மருத்துவர் குல சங்கம் முதல் கமிட்டிக் கூட்டம்

சென்னை மாகாண மருத்துவர் குல சங்க முதல் கமிட்டிக் கூட்டம் 31-3-45 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருச்சி நகர மண்டபத்தில் தலைவர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

குடி அரசு

1945-ஆம் மார்ச்சு-மீ 17-உ

# வெட்கமில்லையா?

இந்திய தேசிய வாதிகளின் போக்கியதை இக்காட்டில் சிரிப்பாய் சிரிப்பது போதாமல் மேல் நாட்டிலும் சிரிக்கப்பட்டு வருகிறது. இந்திய தேசியம் என்பது பார்ப்பனீய ஆதிக்கத்திற்கு மதத்தின் பேரால் சங்கராச்சாரிகள் அவர்களது மடங்கள், அய்யர், அய்யங்கார், சாஸ்திரி, ராவ், கனபாடி முதலியவர்கள் தொண்டு எப்படியோ அதுபோல் தேசியத்தின் பேரால் காந்தி, காங்கரஸ், நேரு, பந்து, ஆச்சாரியார், சாப்ரு, விஜயலக்ஷ்மி, ருக்மணி முதலியவர்கள் தொண்டுகளை ஆதாரமாய்க் கொண்டதாகும்.

சங்கராச்சாரி, சாஸ்திரி முதலியவர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இந்து மதத்தை (வேதபுராணத்தை) தலைமையாகக்கொண்டு நடத்தப்படும் பிரசாரம் என்றால் காந்தி காங்கரஸ் நேரு, ஆச்சாரியார், சாப்ரு முதலியவர்கள் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இந்தியாவில் உள்ள இந்துக்கள் அல்லாத (வேத புராணங்களை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் அல்லாத) மற்ற மக்களையும் தங்கள் ஆதிக்கத்திற்குள் கீழ்ப்படுத்தி தங்களுக்கு எதிராக உள்ளவர்களை அடக்கி ஒடுக்கி ஒழித்துவிடுவதற்கு தேசம், சுயராஜியம் என்பவற்றைத் தலைமையாகக்கொண்டு செய்யப்படும் காரியமேயாகும்.

இதனால் தான் மதத்தின் பிரசாரம் செய்பவர்கள் போலவே இவர்களும் இந்திய தேசியத்தின் உள்ள புரட்டுகளையும் பித்தலாட்டங்களையும் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவைகளைசற்றும் லட்சியம் செய்யாமல் அதனால் ஏற்படும் மானக்கேட்டிற்கும் இழிவுக்கும்கூட சிறிதும் வெட்கப்படாமல் மதயடியும் நையடியும் அதே பாட்டைப்பாடி மக்களை ஏய்க்கப் பார்க்கிறார்கள். எப்படி எனில் இந்து மதப் பிரசாரமும் (வேதபுராணப் பிரசாரமும்) அப்படித்தானே நடந்து வருகின்றது. தேவர்களின் புரட்டுகளையும், புராணங்களின் ஆபாசங்களையும் கடவுள்களின் இழிவுகளையும் ஒழுக்கக் கேடுகளையும் பற்றி எவ்வளவு எடுத்துக்காட்டினாலும், எவ்வளவு ருஜூப்படுத்தினாலும் அதனால் நலம் பெற்றுப் பிழைக்கின்றவர்களுக்கு, அந்தக் கூட்டத்திற்கு உணர்ச்சியோ, மானமோ, நாணயமோ, நல்ல புத்தியோ வந்ததாக யாராவது சொல்ல முடியுமா? அல்லது யாரை யாவது எடுத்துக் காட்டமுடியுமா? எவராவது திருந்தினார்களா? என்றால் எப்படி காட்ட முடியாதோ அதுபோலவே தேசியத்தின் புரட்டுகளையும், இழிவுகளையும், ஆபாசங்களையும், ஒழுக்கக் கேடுகளையும் எவ்வளவு தான் எடுத்துக் காட்டினாலும், ருஜூப்பித்தாலும் அவர்களுக்கு மானவெட்கமோ, சூடுசொரணையோ, நல்லபுத்தியோ நாணயமோ வருவதில்லை.

இது பார்ப்பனீயத்தின் தன்மை-ஆரியத்தின் அடிப்படை என்பதோடு பார்ப்பனீய-ஆரிய அடிமைகளின் 'வரப்பிரசாத'மும் ஆகும்.

ஆதலால் இவை இரண்டையும் திருத்தி இதில் ஈடுபட்ட மக்களுக்கு மான ஈனம், நல்லறிவு, நாணயம் என்பவைகள் ஏற்படுத்துவது என்பது மிக்க விலைகொடுத்து உண்டாக்கவேண்டியவைகளாய் இருக்கின்றன.

பார்ப்பானும் பார்ப்பான் அல்லாதானும் ஒரு பந்தியில் உட்கார்ந்து சாப்பிடுவது தோஷம் என்றும், கூடாது என்றும் சங்கராச்சாரியார் சொல்லுவதையே தான் ரைட் ஆனரபில் சாஸ்திரியாரும், சர். பி. எஸ். சிவசாமி அய்யரும் மற்றும் அந்த ஜாதி தேசிய வாதிகளும் ஒப்புக்கொண்டு "தோஷம்" என்கின்ற வார்த்தையை மாத்திரம் விட்டுவிட்டு "கூடாது" என்கின்ற வார்த்தையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். சொல்லுவதில் மாத்திரம் சங்கராச்சாரியார் "பிராமணனும் சூத்திரனும் ஒன்றாய் இருந்து சாப்பிடுவது சாஸ்திரங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் விரோதம்" என்றால், சாஸ்திரியும் அய்யரும் சாஸ்திரம் ஸ்மிருதி என்பதற்குப் பதிலாக "பிரிட்டிஷார் அளித்த வாக்குறுதிக்கும், இந்து சர்க்கார் சட்டத்திற்கும் விரோதம்" ஆனால் கூடாது என்கிறார்கள்.

அதுபோலவேதான் அதிதீவிர தேசிய வாதிகளும் தேசியத்திற்கு சிறை சென்றவர்களான டாக்டர்கள் ராஜகோபாலாச்சாரி, டி. எஸ். எஸ். ராஜன், டி. வி. சாமிநாத சாஸ்திரி ஆகிய பார்ப்பனர்களும் மற்றும் ஒரு அடி முன்னால் சென்று "ஒன்றாய் இருந்து சாப்பிடுவது சாஸ்திரத்திற்கு விரோதமும் அல்ல, சட்டத்திற்கு விரோதமும் அல்ல. ஆனால் இஷ்டமில்லாதவர்களைக் கட்டாயப்படுத்துவது எங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாயிருக்கிறது. ஆகையால் விரோதமாக ஓட்டுக் கொடுக்கிறோம்" என்று விரோதமாக (ஜூலை போராட்டத்தின் போது) ஓட்டுக் கொடுத்து அவர்கள் ஓட்டு தோல்வியுற்றவுடன் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டியில் இருந்த 7 தேசியப் பார்ப்பனர் ஒரே அடியாய் இராஜினாமாவும் செய்தார்கள். இவர்களுக்கு மேலானவரும் மகாத்மா பட்டம் பெற்றவருமான காந்தியார் அவர்களோ என்றால் இந்தப் பிரச்சினை அவரிடம் சென்ற போது "இதெல்லாம் அவரவர்கள் மனச்சாட்சியைப் பொருத்ததே ஒழிய தேசியத்திற்கு சம்பந்தப்பட்டதல்ல என்று தீர்ப்புக் கூறிவிட்டார். பிறகு காங்கரஸ் மனச்சாட்சி இடங்கொடுத்தவர்கள் கைக்குத் தான் போக முடிந்ததே தவிர மனச்சாட்சிக்கும் கொள்கைக்கும் ஆக ஓட்டுச் செய்த ஈ. வெ. ரா., டாக்டர் வரதராஜுலு, எஸ். இராமநாதன் முதலியவர்கள் அதில் இருக்க முடியாமல் விலக வேண்டியதாகவே முடிந்தது. இதன் தத்துவம் என்னவென்றால் மதமும், தேசியமும் இரண்டும் பார்ப்பனர்களின் நலத்துக்கும் அதற்கேற்ற மனச்சாட்சிக்கும் ஏற்ற பாதுகாப்பு ஆயுதம் என்றும், அதிலுள்ள பார்ப்பனரல்லாதார்கள் அப்பார்ப்பனர் நலத்துக்கு உழைக்கும் கைச்செலவில்லாத கூலிகள் என்றும் ஆகவில்லையா என்பதேயாகும்.

அவர்களின் மானங்கெட்ட தன்மைக்கு மற்றொரு உதாரணம் பாருங்கள், இவர்கள் தேசிய வாதிகளாம் தேசத்தின் சுயமரி

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

யாதை இவர்களுக்குப் பூஷணமாம்.

என்ன என்றால்:

இன்றைய கோரமான உலக யுத்தத்திற்கு இந்தியாவில் இருந்து 25 லட்சம் பேர்கள் தங்கள் உயிரைக் கொடுக்கத் தீர்மானித்துக் கொண்டு பட்டாளத்தில் சேர்ந்து யுத்த முன்னணிகளில் இருந்து சமர்போர் புரிந்து வீரத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றால் இவர்களைப் பற்றி இந்தியாவில் பிறந்த ஒரு பெண், அதுவும் தேசியம் என்பது எங்கள் ஜாதிக்குத்தான் அதிலும் எங்கள் குடும்பத்துக்குத்தான் உரிமை என்று சொல்லும்பார்ப்பன ஜாதிப் பெண், அதுவும் காந்தியாருக்குப் பின் பட்டத்திற்கு வரப்போகும் பண்டித நேருவின் பின் வந்த பெண், இந்தியாவின் யோக்கியதையை அமெரிக்காவிற்கு எடுத்துரைக்கப் போன அதுவும் பெண் ஆன விஜயலக்ஷ்மி அம்மாள் அந்நாட்டு மக்களின் முன் நின்று சிறிதும், மானம், ஈனம் இன்றி "எங்கள் புண்ணிய பூமியாகிய, சுயமரியாதையும் சுதந்திர வேட்கையும் உள்ள வீர பூமியாகிய இந்தியாவில் இருந்து யுத்தத்தில் சேவை செய்யப் படையில் சேர்ந்து யுத்த முன்னணியில் நின்றுகொண்டு தங்கள் உயிரைத் திரணமாக மதித்து இன்று போர் புரியும் 25 லட்சம் மக்களும் யார் என்றால், அவர்கள் தேசியப் பற்றுக்கொண்ட மனிதர்கள் அல்ல" என்றும் கஞ்சிக்கு வகையற்ற கஞ்சித் தொட்டிக் கூலி மக்கள் என்றும், வெறும் வயிற்றுப் பிழைப்புக்காரர்கள் என்றும், அவர்கள் தங்கள் வீரம் காரணமாக அல்லவே அல்லாமல் சோற்றுக்காக படையில் சேர்ந்த சோற்றுப்பட்டாளங்கள் என்றும் தெளிவாக விளங்கும்படி எடுத்துரைத்து வருகிறார்கள் என்றால் இதைவிட இந்தியாவைப்பற்றி, இந்திய பழங்குடி மக்களைப்பற்றி, இந்திய வீரர்களைப் பற்றி இழிவாக இனி யாரால்தான் பேசமுடியும் என்று கேட்கிறோம்.

ஹாஹா போன்ற கயவர்கள் கூட இந்தியர்கள் தன்மையை இவ்வளவு இழிவாகப் பேசியதாக யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம்.

அமெரிக்காசென்று பணம் திரட்ட நிர்வாணமாக நின்று டேன்ஸ்சாடும் ஒரு இந்தியப் பெண்ணின் மானம்கூட இதைவிட மேலானதாகத்தான் கருதமுடியுமே ஒழிய அதை இதைவிட இழிவாக கருதமுடியுமா என்று கேட்கின்றோம். இத்தம்மாள் இப்படிப் பேசிய இதை-பேச்சைப் பற்றி எந்தத் தேசபக்தனுக்காவது, எந்தத் தேசிய வீரனுக்காவது, எந்தத் தேசியப் பத்திரிகைக்காரருக்காவது மானம், வெட்கம் சுரணையாவது வந்து ஆத்திரப்பட்டார்களா என்று கேட்கின்றோம்.

ஒரு பார்ப்பனனாவது பட்டாளத்தில் சேர்ந்து துப்பாக்கி அக்கினிச் சண்டைக்குப் போயிருப்பானானால் இந்தப் பார்ப்பனத்தியம்மாள் வாயில் இந்த இத்தகைய பேச்சு வந்திருக்குமா என்று யோசித்துப் பாருங்கள்!

நல்ல போர் மூண்டு நடக்கும் காலத்தில் இந்தியாவின் மூன்று புறமும் கடல்கள் இருந்து கடலோர நகரங்கள் தோறும் எந்த நேரத்தில் வெடிகுண்டு விழுமோ, எந்தப் பக்கத்தில் எதிரி வந்து புகுந்து நாட்டைப் பாழாக்கி பெண்டுபிள்ளை சொத்து சுகங்களைக் கைப்பற்றி சூறையாடுவானோ என்று பதைத்துக்கொண்டிருக்கும் ஆபத்தான நேரத்தில், இந்தப் பார்ப்பனர்கள் ஏதோ 4 விபீஷணர்களையும் சில அனுமார்களையும் சுவாதீனம் செய்துகொண்டு மற்ற மக்கள் எவரையும் லட்சியம் செய்யாமல், வெள்ளைக்காரனை-பிரிட்டிஷாரை மிரட்டி "என்னிடம் அதிகாரத்தை ஒப்புவித்துவிட்டு வெளியேறுகிறாயா? அல்லது இந்த நாட்டை (எதிரிகளுக்குக் காட்டிக் கொடுத்து அவர்களைக் கூட்டி வரட்டுமா என்பது போல்) இம்சைக்கு விடட்டுமா?" என்று இழிதகைமையான பேரம் பேசப் புறப்பட்ட சமயத்தில் நாட்டிலே, மக்கள் பார்ப்பனர்களை நம்பாமல், பார்ப்பனீயத்தில் பற்று இல்லாமல், பார்ப்பனத் தொல்லைக்கும், கொடுமைக்கும் பயந்து காங்கிரஸிலிருந்து விலகி தனி ஸ்தாபனங்கள் ஏற்படுத்திக்கொண்டு; தங்கள் நலனுக்கு ஆகத் தனித்து நின்று போராடிக் கொண்டிருக்கும் மக்கள் அதாவது இந்நாட்டுப் பார்ப்பனரல்லாத மக்களும், பார்ப்பன குலாம் (அடிமை)கள் அல்லாத மக்களும் இவர்களோடு அதாவது இந்த காங்கிரஸ் கும்பலோடு சேர்ந்துகொண்டு ஜப்பான் ஜெர்மனியாருக்குத் தங்கள் நாட்டையும், பெண்டு பிள்ளை சொத்து சுகங்களையும் சுவாதீனப் படுத்தி வேத

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 17-3-45ந் தேதி வரை 29722 அங்கத்தினர்கள் ரூ.2950—10—0 சந்தா

மார்ச்சு மாதம் 17ம் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 4953 | 9. வட ஆற்காடு | 1571 |
| 2. கோவை | 4880 | 10. மதுரை | 1353 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 760 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சிநாடு) | 168 |
| 5. இராமநாதபுரம் | 2010 | 13. இலங்கை | 165 |
| 6. திருநெல்வேலி | 1961 | 14 பெங்களூர் | 158 |
| 7. சென்னை | 1700 | 15. புதுக்கோட்டை | 59 |
| 8. தென் ஆற்காடு | 1638 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 29722. சந்தா ரூ. 2950-10-0.

கர்ல மக்களைப்போல் ஆகிவிடுவர் அல்லது தங்களாலான உதவியை எதிர்ப்பாளர்களுக்குக் கொடுத்து நம்களை இந்த கோரக் கொடுமையினின்று காப்பாற்றிக்கொள்ளுவதானல் அது சிந்தித்து சிந்தித்து போரில் கலந்து தங்களையும் தங்கள் நாட்டையும் கெட்டிவிருந்து காப்பாற்றிக் கொண்ட மக்களை வயிற்றுச் சோற்று மக்கள் என்று சொன்னால் வேறுபாடாக இருந்தால் இந்தக்கூட்டத்தார் கதி என்னாகி இருக்கும்? அல்லது வெள்ளையனின் சூழ்ச்சியாகிய பார்ப்பன-பிரிட்டிஷ் ஒப்பந்தம் இருந்து பார்ப்பனர்களைக் காப்பாற்றி வரும் தந்திரத் தன்மை இல்லாதிருந்திருக்குமானால் இவர்கள் கதி என்ன ஆகியிருக்கும் என்று சிந்தித்துப் பார்க்கும்படி மக்களை வேண்டுகிறோம்—

காந்தியாரும் ஜவஹர்லால் நேருவும் விஜயலட்சுமியேநுவும் அறை முக்குப் பக்கத்தில் இல்லாமல் பந்தோபஸ்தான இடத்தில் இமயமலை அடிவாரத்தில் உட்கார்ந்து கொண்டு இருப்பதால் "நாட்டை ஒன்றா என்னிடம் விடு. இல்லாவிட்டால் (ஜப்பான் ஜர்மனிக்கு விடு என்பதுபோல்) இயற்கைக்கு விடு" என்று சொல்லி அந்தப்படியே செய்ய தனது சுவிகளுக்கும் உத்திரவு போட்டார்கள் என்பதோடு அவர்களுடைய வாழ்க்கை மடாதிபதிகள் வாழ்க்கை ஆனதால் மற்ற மக்கள் வாழ்வைப்பற்றி கவலை இல்லாமல் இப்படி அவர்கள் பேச வேண்டியதாயிற்று.

எந்த இராஜா வந்தாலும் சரி, செய்ய மானமின்றி பூரண சுகமெடுத்து அசப்படுத்திக்கொள்ளும் ஜாதியாரானதினால் இந்த சமயத்தில் நாட்டை வெளியானுக்கு அனுகூலமாக ஆக்குவதில் கவலைப்படாமல் கொடி காட்டி அழைப்பது போல் அவர்கள் நடந்து கொள்ள வேண்டியதாயிற்று என்பதல்லாமல் வேறு என்ன?

நம்மவர்கள், அந்தச் சமயத்தில் மானத்துடனும், நேர்மையுடனும், புத்திசாலித்தனமாகவும் நடந்து கொள்ளாமல் அவர்களைப் போலவே அந்தவது ஜவஹர்லால் நேரு, விஜயலக்ஷ்மி நேரு, காந்தியார் ஆகியவர்களின் ஜாதியாரைப் போலவும் அவர்களின் அடிமைகள் போலவும் நடந்து கொண்டு தண்டவாளத்தைப் பேர்த்து, தந்தியை அறுத்து, தபால், ஸ்டேஷன்களைக் கட்டடங்களுக்கு நெருப்பு வைத்து, இந்திய அதிகாரிகள் முகத்தில் திராவகம் கொட்டி கொலை செய்யும் வேலையில் ஈடுபட்டிருக்கிறோமானால் நம் விஜயலக்ஷ்மி பார்ப்பனத்திகள் நம் மக்களையும், நம்மையும் சோத்துப் படை என்று சொல்லி இருக்கமாட்டார்—வீரப் படை, ஆஞ்சநேயப் படை, அனுமார் படை, விபீஷண ஆழ்வார் தன்மை வாய்ந்த படை என்று சொல்லி இருப்பார்கள்.

இப்பொழுது நாம் எப்படியோ துணிந்து இப்பார்ப்பன விஷமத்தனத்தையும், நாசத்தொழிலையும் முளையிலேயே கிள்ளி (அடக்கி) பிரிட்டனுக்குத் தோல்வி தோல்வி என்ற நிலை மாறி வெற்றி வெற்றி என்று சொல்லும்படியான தன்மை கண்ட பிறகு, அந்த ஆத்திரத்தின் பயனாய் புத்தி இழந்து, மானமிழந்து, நாணயமிழந்து இழிவான விஷமச் செய்யாமல் அமெரிக்கா சென்று "சண்டைக்கு வேலை செய்த 25 லட்சம் ஆட்களும் சோத்துப் படை"யென்றும் சண்டைக்கும் பணம் கொடுத்தவர்கள் அடிமைகள் என்றும் சொல்லும்படியான ஈனப் புத்தி உடையவர்களாகி விட்டார்கள்.

இவர்களுக்கு மானமோ நல்லறிவோ நாணயமோ இருந்திருக்குமானால் வெள்ளைக்காரனை வெளியே போ என்று சொல்லும் முன்பு இந்தியாவில் உள்ள மற்றக் கட்சியார்களிடம் கூடிப் பேச முன்வந்திருப்பார்கள். அறிவில்லாத காரணத்தால் இவர்கள் கனவு கண்டபடி ஜப்பானியனோ ஜெர்மனியனோ வராமல் போனதோடு வரவே முடியாமலும் போனதால் (முன்பு நாமே போலத் தெரிந்த) மற்றக் கட்சியார்கள் இன்று மலைபோல் வளப்பட்டு எப்படியாவது சுவர் காலில் விழுந்தாவது அதே பிரிட்டிஷ் அதிகாரத்தின் சேவை செய்ய 'பாரிடமும் மண்டியிட ஓடுகிறார்கள். மானமிருந்தால் "நாடு கக்கிவிட்டாலும் சரி நீ வெளியில் போ பாழ் வசமானாலும் சரி நீ வெளியில் போ" என்று சொன்னவர்கள் மதி கூடியும் அந்த ஆட்சியின் சேவை செய்ய அதிகாரம்பெற நினைக்கலாமா என்று கேட்கிறோம். வெள்ளையன் ஜெயித்துவிட்டான் என்று தெரிந்த உடன் இந்தப் பார்ப்பனர்களும் பார்ப்பனத்தி அம்மாள்களும் மானம் ஈனம் இருந்தால் மூட்டை முடிச்சுகளுடன் ஜெர்மனிக்கோ, ஜப்பானுக்கோ ஓடிப்போய் இருக்க வேண்டுமே ஒழிய அமெரிக்காவுக்குச்சென்று இந்தியாவுக்குள் ஜப்பானியனும்ஜெர்மனியனும்வரமுடியாமல் செய்யத் துணை நின்ற இந்திய மக்களை வயிற்றுச் சோற்றுப்படையென்றும் அடிமைக்கூட்டம் என்றும் சொல்லுவது அம்மையாரின் ஜாதிக்கு பெருமை அளிப்பதாகுமா என்று கேட்கின்றோம்.

காந்தியாரானாலும் சரி நேர்மையான மந்திரிமாரோ—லட்சுமிடமோ — மானத்திலிட்டமோ— நாணயத்திடமோ நம்பிக்கை உள்ளவராய் இருந்திருப்பாரானால் நெருக்கடியான சமயத்தில் வெள்ளையனை வெளியாக்குவதாக மிரட்டி பார்ப்பன ஆதிக்கம் பெற முயன்ற காரியம் தோல்வியுற்று அது முடியாத காரியம் என்ற பட்டவுடன் தற்கொலை செய்து கொண்டிருக்கவேண்டுமே ஒழிய மற்றவர்கள் வீட்டுக்கு நடந்தாவது பதவியில் அதிகாரத்தில் இருந்து எப்படியாவது பார்ப்பனீயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற காரியத்தில் இறங்கி இருக்கமாட்டார். அதாவது காங்கிரசை மூடிவிட்டு மற்றவர்களுடன் சேர்ந்து தொண்டாற்ற முற்பட்டிருப்பார்.

பிரிட்டிஷாரின் போக்கியதை மக்களுக்குத் தெரியாதென்று யாரும் இந்தச் சமயத்தில் கருதிவிடக் கூடாது. அல்லது அவர்கள் நமக்கு மிகுந்த தர்ம கர்த்தாக்கள் என்று நாம் கருதி இருப்பதாகவும் யாரும் நினைத்துவிடக்கூடாது. அல்லது அவர்களுக்கும் நமக்கும் பொருத்தமான கூட்டுறவு ஒப்பந்தம் இருக்க முடியும் என்றும் யாரும் நினைத்துவிடக் கூடாது. எப்படியாவது பிரிட்டிஷாருக்கு வழி அனுப்பு உபசாரம் சீக்கிரம் செய்தாக வேண்டும். அப்படி வழியனுப்பு உபசாரம் செய்யவேண்டுமானால் முதலாவ

ரோஜா முத்தையா

தாக நாம் செய்யவேண்டிய காரியம் பிரிட்டிஷாருக்கும் ஆரியர்களுக்கும் இருக்கும் ஒப்பந்தத்தை உடைக்கவேண்டும்.

நம் நாட்டிலுள்ள ஆரியர்களும், பிரிட்டனில் உள்ள ஆரியர்களும் ஒரே இனத்தவர், ஒரே தன்மையவர்கள் ஆவார்கள். இவர்கள் பூணூல் ஆரியர்கள், அவர்கள் பூணூல் இல்லாத ஆரியர்கள். இரண்டு பேர் லக்ஷியமும் ஒன்றுதான். அதாவது ஆரியர்கள் அல்லாதவர்களை எப்படி அடக்கி ஒடுக்கிவைத்து நிரந்தரமாய் ஆண்டுகொண்டு இருப்பது என்பதுதான் அவர்கள் லட்சியமும் ஒப்பந்தத்துக்கு மூலமாகும். ஆகையால்தான் இந்நாட்டு வளங்கள் பெரிதும் இந்த இரண்டு ஆரியர்களே அநுபவிக்கவும் இந்நாட்டு ஆரியரல்லாத மக்கள் சூத்திரராய், அடிமைகளாய், கல்வி இல்லாதவர்களாய் சர்க்கார் பதவிகளில் கீழ்த்தர ஆள்களாய் உடலுழைப்பாளர்களாய், கீழ் குல மக்களாக பிரிட்டிஷார் முன்னும், இந்திய ஆரியர் முன்னும், இந்துக்கள் கடவுள்கள் முன்னும், இந்து சமுதாயத்திலும், இவர்கள் வந்த காலமுதல் இருந்து வருகிறார்கள்.

அதனால்தான் நாம் எப்பாடு பட்டாவது என்ன விலை கொடுத்தாவது பிரிட்டிஷ் ஆரியர் இந்திய ஆரியர் ஆகிய இருவருக்குள்ளும் இருந்துவரும் இந்திய அரசியல் ஒப்பந்தத்தை உடைத்துத் தவிடுபொடியாக்க வேண்டியது முதலாவது கடமை என்று கூறுகிறோம்.

அதுவே வாணமான வீரனை வெற்றிக்கு வழிகாட்டியான காரியம் என்றும் கூறுகிறோம். அதற்கு வழி திராவிட நாடு திராவிடர்களுக்கு ஆவதுதான்.

## சர்க்காரும் உணவுப் பொருள் பங்கீடும்

ஒரு நாட்டின் சர்க்காரின் கடமை, தன்னாட்டு மக்கள் சுகமாக வாழ வழிசெய்வதுதான். இதற்குத் தடையாக உள்நாட்டிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ ஏதாவது அபாயம் ஏற்படுமானால் அதைத்தடுத்து தன்னாட்டு மக்களை காக்கவேண்டும். அதிலும் சமாதான காலத்தில் இவைகளைக் கவனித்து நிர்வகிப்பதைக் காட்டிலும் போர்க்காலத்தில் இவைகளை கவனித்து நிர்வகிப்பதில்தான் பெருமையிருக்கிறது. எந்த சர்க்கார் இவைகளை வெற்றிகரமாக நடத்திச் செல்லுகிறார்களோ அவர்களே உலகினரால் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று போரின் காரணமாக பல நாடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் இந்தியாவும் ஒன்று.

மக்களுக்கு மிக தேவையானவைகள் உணவு, உடை, இடம். இவைகளை நிரந்தரமாகப் பெற்றிருக்கிறவர்களைப் பற்றிக் கவலையில்லை. இன்றைய பொழுது தீர்ந்தது, நாளைய பொழுது எவ்வாறு போகும் என்று கவலையில் இருக்கும் கோடிக்கணக்கான மக்களின் நிலைமையைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறோம். இவர்கள் நிலை போரின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. உணவுப் பொருளின் விலையும், உடையின் விலையும், குடியிருக்கும் இடத்தின் கூலியும் பல மடங்கு உயர்ந்துவிட்டது. சர்க்காராரும் ஏதேதோ கட்டுப்பாடுகள் செய்து வருகிறார்கள். நாள்தோறும் புதிதுபுதிதாக உத்தரவுகள் பிறப்பித்து வருகிறார்கள். இவைகளினால் ஒரு சிலருக்கு சௌகரியம் ஏற்பட்டிருக்கலாமே யல்லாது எல்லோருக்கும் சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கில்லை.

இன்று நாட்டில் கொள்ளைநோய்கள் காட்டுத் தீ போல் பரவுவதற்கும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடிவதற்கும் என்ன காரணம்? போரில் நேரில் ஈடுபட்டிருக்கிற நாடுகளில்கூட மக்கள் இவ்வளவு தூரம் கஷ்டத்திற்குள்ளாகியிருப்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை; அந்நாடுகளில் யுத்தத்திற்கு முன்னிருந்த நிலையிலேயே உணவுப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். மக்களுக்குத் தேவையான முக்கிய உணவுகளை 'ரேஷன்' செய்திருக்கிறார்கள். இதனால், அந்நாட்டு மக்களுக்கு உணவு, உடை, முதலியவைகளில் 'என் கஷ்டம் ஏற்படும்?' என் நோய்கள் பிடிக்கும்?

இந்நாட்டில் மக்கள் நிலை அப்படியா இருக்கிறது என்று எண்ணிப்பாருங்கள். உதாரணமாக ஈரோட்டில் உணவுப் பொருள் கட்டுப்பாடு ஏற்படுத்தியதிலிருந்து மக்கள் முன்போலவே பெரிதும் துன்பத்திற்குள்ளாகி வருகிறார்கள்.

பெரிய நகரங்களில் உள்ள மக்கள் இவ்வாறு துன்பப்படுவார்களேயானால், பத்திரிகைகள் போடும் கூப்பாட்டுக்கும் பொதுக் கூட்டங்களில் நிறைவேறும் கண்டனங்களுக்கும், தூதுகோஷ்டிகளுக்கும் குறைவிருக்காது. சர்க்கார் உடனே கண் திறந்து விருவிருப்புடன் வேலை செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். அடுத்த சிலநாட்களில் குறைகள் நீக்கப்பட்டுவிடும். ஆனால் ஈரோடு போன்ற நகரங்களில் கேள்வி கேட்பாடுகிடையாது. இட்டதே சட்டமாக விளங்குகிறது. அரிசிக்குப் பதிலாக எதைப் போட்டாலும் ஏன் என்று கேட்கக்கூடாது என்ற நிலையிருக்கிறது. இதுவரை ஒரு வார அரிசியில் ஆறில் ஒரு பங்கு கோதுமை போட்டுவந்தார்கள். கோதுமையை எவ்வாறு பக்குவம்செய்து உண்ணுவது என்பதுபற்றி நூற்றுக்குப் பத்துபேர் படித்த நாட்டில் சர்க்காரார் பத்திரிகைகளில், அதுவும் ஒருவருஷத்திற்குப் பின் விளம்பரம் செய்து விளக்கினார்கள். அதுவும் எப்பொழுது? கோதுமை எவ்வாறு உண்ணுவது என்று மக்கள் தாங்களாகவே உணர்ந்துகொண்டபிறகு. இதிலிருந்து தெரிந்துகொள்ளலாம், சர்க்காரார் எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை. கோதுமையை வாங்கி மக்கள் கஷ்டப்பட்டது போதாதென்று 'சோளத்தை'யும் வாங்கிக் கஷ்டப்படவேண்டுமாம் இனிமேல். ஒருவார அரிசியில் கோதுமை வழக்கம்போல் ஆறில் ஒரு பங்கும், சோளம் ஆறில் ஒரு பங்கும் ஆக இனிமேல், மூன்றில் இரண்டு பங்குதான் அரிசி கிடைக்கும் எனத் தெரிகிறது. இதைப் பக்குவம் செய்து உண்ணும் விதம் ஒருவருஷத்திற்குப் பிறகு விளக்கப்படும். இம்மாதிரி அடிக்கடி உணவுப் பொருளில் மாற்றம் ஏற்படுத்துவதினால் மக்கள் எத்தனைய கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடுகிறது என்பதையும் எவ்வளவு கொடிய நோய்களுக்குள்ளாக

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் காஞ்சீபுரம், நன்னிலம், தஞ்சாவூர் முதலிய ஊர்களுக்குச் சென்றுவிட்டு 11-3-45-ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார். காலில் உள்ள புண்ணின் தொந்திரவால் சென்னையில் சிகிச்சை செய்து கொள்வதற்காக 13-3-45-ந் தேதி இரவு சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஒரு மாத காலம் வரை ஓய்வு எடுத்துக்கொள்வார்.

o o

சென்னை, மார்ச். 15-
தலைவர் பெரியார் அவர்கள் நேற்று காலை சென்னை வந்து சேர்ந்தார். அநேகமாக ஏப்ரல் 1-ந் தேதி மாநாடு வரை இங்கேயேயிருப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையிலிருந்தே ஓய்வு எடுத்துக்கொள்வார். இம்மாதக் கடைசி வரை எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளமாட்டார்.

## அனுதாபம்

திருச்சி மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் மிக முக்கியஸ்தரும் முதன்மை வாய்ந்தவரும், புதுக்கோட்டைத் தனியாசு உதவி நிர்வாக அதிகாரியுமான கான்பகதூர் பி. கலிபுல்லா சாகிப் அவர்களது இரு குமாரர்கள், மருத்துவக்கல்லூரியில் படித்துவந்த 22 வயதுடைய இஸ்மாயீல் என்பவரும், அவரது இளவல் பி.ஏ. வகுப்பில் வாசித்துவந்த 18 வயதுள்ள மகம்மதலி என்பவரும் டைபாயிட் ஜுரம் காரணமாக இயற்கை எய்தினர் என்பது கேட்டு மிகவும் வருந்துகிறோம். ஒரு கிழமைக்குள் மிக இளம் வயதிலேயே இரு குமாரர்களைப் பிரிந்து வருந்தும் கான்பகதூர் அவர்களுக்கும் அன்னார் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

கோரிடுகிறது என்பதையும் சர்க்காரார் எண்ணிப் பார்த்து, மக்களது சுகமே தங்களது சுகம் என்பதை உணர்ந்து நடந்துகொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளவும் ஆசைப்படுகிறோம். அதாவது ஈரோட்டு மக்கள் உளுந்து வாசனை கண்டு 6-மாதங்களாகின்றன. 6-மாதகாலமாக ஒரு முக்கியமான பழக்கமான உணவுப் பொருள் இல்லாமல் வந்ததாகவும் இருக்குமோ என்பதையும் சர்க்கார் எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

## வடாற்காடு ஜில்லா ஜஸ்டிஸ் கட்சிக் கூட்டம்

### ஜில்லா தே. இ. ந. உ. சங்கம் என்ற பெயருள்ள கமிட்டி கலைக்கப்பட்டது

திருப்பத்தூர், மார்ச். 4-
இன்று மாலை 4 மணிக்கு முனிசிபல் ஹைஸ்கூலில் தோழர் ஜி. சாமிநாயுடு பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் S. I. L. F. கமிட்டிக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. திருவண்ணாமலை ஜில்லா போர்டு மெம்பர் தோழர் எம். ஆர். ரங்கசாமி ரெட்டியார் அவர்களும், ஜில்லா போர்டு தலைவர் பி. பக்தவச்சலம் நாயுடு அவர்களும் வாணியம்பாடி வைஸ்சேர்மன் வி. எல். விஸ்வநாதம் அவர்களும் ஆகிய காமினேஷன் பதவி ஆன் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் என்ற பழைய பெயரே இருக்க வேண்டியது என்று பேசினார்கள். சேலம் மாநாட்டுத் தீர்மானப்படி பெயர் மாற்றம் அவசியம் வேண்டும் என்றும் திராவிடர் கழகம் என மாற்றப்பட வேண்டுமென்றும் நாமினேஷன் பதவி இல்லாதவர்களான வேலூர் தோழர் திருநாவுக்கரசு, வாணியம்பாடி தோழர்கள் சி. கோவிந்தராஜன் ஜி. பழனிமுத்து, ஆம்பூர் பெருமாள், திருப்பத்தூர் தோழர் எம். நடேசம் பிள்ளை ஆகியவர்கள் வெகு விளக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்கள்.

தலைவர் வடாற்காடுஜில்லா எஸ். ஐ. எல். எப். கமிட்டியை இன்றோடு கலைத்துவிட்டதாகக் கூறி கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

o o

திருப்பத்தூர் மார். 4—
இன்று சேர்ந்த பல கமிட்டி மெம்பர்கள் அபிப்பிராயத்தை உத்தேசித்து இன்றையதினம் இக்கமிட்டியை (எஸ். ஐ. எல் எப்)ஐ கலைக்கப்பட்டு இருக்கிறது.
ஜி. சாமிநாயுடு, தலைவர்.

## "சண்டமாருதம் அல்லது வீரகேசரி"

நாகை திராவிடர் நடிகர் கழகத்தாரால் இந் நாடகம் விரைவில் நடிக்கப் போவதாகத் தெரிகிறது. கதை, வசனம் தோழர் ஆர். வி. கோபால் அவர்களால் எழுதப்பட்டது.

## ஆனந்த கல்வி நிலையம்

ஈரோடு தாலுகா ஊ. வேலம்பாளையத்தில் ஏழை மாணவ மாணவிகளுக்கு இந் நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட உதவி செய்யுமாறு இந் நிலையக் காரியதரிசி கோருகிறார்.

## வில்லியாக்கத்தில் சர். செல்வம் நாள்

வில்லியாக்கம் சமதர்ம சங்கச் சார்பில் 18-3-45-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை சர். செல்வம் நாள் பொதுக்கூட்டம் நடைபெறும். பகல் 3 மணிக்கு வில்லியாக்கம் சமதர்ம சங்கத்திலிருந்து ஊர்வலமும், மாலை 5-30 மணிக்கு மாபெரும் கூட்டமும் நடைபெறும். தோழர்கள் என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், எஸ். எ. ராமன், முருகேச பாகவதர், தோழர் சத்யவாணிமுத்து ஆகிய மற்றும் பலர் பேசுவார்கள்.

## சாமி தரிசனத்தை எண்ணியவன் கதி

சிதம்பரம்,
இந்நகர் உயர்நிலைப் பள்ளியில் 5வது 'பாரம்' பயின்ற விஜயராகன் என்ற 17 வயது பிராமண மாணவன் 11-3-45 ஞாயிறு இரவு நடராசா கோவிலில் அர்த்த சாமி தரிசனம் பார்க்க எண்ணி சிவகங்கை எனும் திருக்குளப் படித்துறையில் இறங்கிய போது வழுக்கி விழுந்து மூழ்கிப்போய்விட்டவன் மகா சிவராத்திரியான மறுநாள் காலை 10 மணிக்கு மிதந்தது கண்டு கரையேற்றினர். மாலை 3 மணிக்கு போலீசார் விசாரணை முடிந்து கோவிலை விட்டுப் பிரேதம் அப்புறப்படுத்தப்பட்ட பின் நடராசருக்குப் பூசை காலங்கள் துடங்கின.

## விற்பனைக்கு

"குடி அரசு" பைண்டு வால்யூம்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. 4-வது வருட முதல் 13-வது வருடம் வரை (6-வது வருடம் நீங்கலாக) கிடைக்கும். ஒரு வருட வால்யூமின் விலை ரூ. 5—0—0. தபால் செலவு பிரத்யேகம். வால்யூமின் எடை அதிகமாக இருப்பதால், ரயில் பார்சல் மூலம் வரவழைத்துக் கொள்ள சௌகரியமுள்ளவர்கள் ஆர்டர் கொடுப்பது நலம்.

"குடி அரசு" பதிப்பகம்,
ஈரோடு.

## மணமகள் தேவை

தேவாங்க ஜாதி 8-வது வரையிலும் படித்து மாதம் 30 ரூபாயிக்குக் குறையாத வருமானமுள்ள நெசவுத் தொழில் செய்யும் 20 வயதுள்ள சி. என். அருணாசலம் என்பவருக்குத் தேவாங்ககுலப் பெண் தேவை

எல்லா விபரங்களுக்கும்,
C. N. அருணாசலம்,
8/341 சொமசுந்தரசாமி
செட்டி தெரு,
அம்மாப்பேட்டை, சேலம் டவுன்.

# திராவிடக் கழகங்கள்

27-1-45-ந் தேதி தஞ்சாவூரில் தோழர் ஜெ. ஜி. கோவில் பிள்ளை பி. ஏ., எல். டி. தலைமையில் 'திராவிட வாலிபர் முன்னேற்றக் கழகம்' திறந்து வைக்கப்பட்டது. தோழர்கள் ஆளவந்தார், எஸ். ஆர். சுப்பையா, சுந்தரராசு, குழந்தையன் ஆகியோர் பேசினார்கள்.

* *

திருச்சி நாகம்மையார் திராவிடர் கழகத் திறப்பு விழா 29-1-45-ந் தேதி குடந்தை தோழர் ஜி. சண்முகம் தலைமையில் நடந்தது. தோழர்கள் நாஸ்திக நாராயணசாமி, எ. ஆர். தர்மலிங்கம், அ. மா. பெரியசாமி ஆகியவர்கள் கழகத்தின் நோக்கம் பற்றி பேசினார்கள்.

* *

திருச்சி ஜில்லா பெரம்பலூர் தாலுகா குரும்பலூர் கிராமத்தில் 29-12-44-ந் தேதி தோழர் கே. ஆர். சங்கரதாஸ் தலைமையில் இளைஞர் திராவிட கழக வாசகசாலை திறப்பு விழா நடந்தது. தோழர்கள் என். நடராசன், கே. சாமிநாதன், எஸ். அகமது உசேன், பழனிமுத்து, நமச்சிவாயம் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

தஞ்சை திராவிட இளைஞர் கழக திறப்புவிழா தஞ்சையில் 14-1-45ல் தோழர் பி. ஆர். மீனாட்சி சுந்தரம் எம். ஏ., தலைமையில் தோழர் பெரியசாமி புலவரால் ஆற்றி வைக்கப்பட்டது. தோழர்கள் எஸ். என். பழனிச்சாமி, பாவலர் பாலசுந்தரம், ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

வெள்ளாலடி தோழர் சம்சுதீன் தலைமையில் வேளுக்குடி திராவிடர் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. ஷை கழகத்திற்கு தோழர்கள் வி. கெ. சிவராம கிருஷ்ணன் தலைவராகவும், வி. எஸ். தண்டபாணி உபதலைவராகவும், வி. என். பக்கிரிசாமி காரியதரிசியாகவும் என். நாகராசன் உபகாரியதரிசியாகவும், வி. ஜி. பழனிவேலு இருப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

குளத்தூர் திராவிடர் கழகத்தின் ஆதரவில், தோழர் அ. தங்கசாமி தலைமையில், 26-1-45-ந் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். ஜீவரத்தினம், பெ. முருகேச பாண்டியன் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

மேலத்திருப்பூந்துருத்தி திராவிட கழகம் கண்டியூர் தோழர் கோ. தண்டபாணி பிள்ளை தலைமையில் 16-1-45-ந் தேதி நடைபெற்றது. தோழர் எம். எ. அஜீஸ் சாயபு செங்கொடியேற்றினார். தோழர்கள் வடிவேலன், சண்முகம், ஜெகநாதன், மணிவேல், சௌரிமுத்து, தோமாஸ் முதலியவர்கள் பேசினார்கள்.

* *

திருச்சி மலைக்கோட்டை திராவிட வாலிபர் கழகத்தின் தோழர் எஸ். ஜெகனாதன் தலைமையில் 24-2-45ந் தேதி கூடி 1945ஆம் ஆண்டுக்கு கீழ்க்கண்ட தோழர்களை நிர்வாகிகளாகத் தெரிந்தெடுத்தார்கள்: எல். சொக்கலிங்கம் பிள்ளை, தலைவர்; வி. நாராயணசாமி பிள்ளை, கெ. கிருஷ்ணமூர்த்தி துணைத் தலைவர்கள்; எ. மாரியப்பன், பொதுக் காரியதரிசி; டி. கெ. சீனிவாசன், டி. எஸ். நாராயணசாமி, கூட்டுக்காரியதரிசிகள்; கெ. ஜம்புலிங்கம் பொருளாளர்; மற்றும் நான்குபேர் நிருவாகிகள்.

* *

வேளுக்குடியில் 27-1-45ந் தேதி வெள்ளாலடி தோழர் சம்சுதீன் தலைமையில் திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் வி. கே. சிவராம கிருட்டிணன் தலைவராகவும், வி. என். பக்கிரிசாமி காரியதரிசியாகவும், என். நாகராஜன் உபகாரியதரிசியாகவும், வி. ஜி. பழனிவேலு இருப்பாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

தஞ்சை ஈ. வெ. ரா. இளைஞர் சங்கக் கூட்டம் 24-2-45ந்தேதி மதுரை தோழர் ஆர். க. ராஜன் தலைமையில் நடந்தது. இச்சங்கத்தின் பெயரை 'திராவிடர்கழகம்' என மாற்றப்பட்டது. புது நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தோழர்கள் என். ஆர். சுப்பண்ணா தலைவராகவும், எஸ். கோவிந்தசாமி உபதலைவராகவும், எ. கே. ஆர். சாமி காரியதரிசியாகவும், டி. கே. குருசாமி உதவி காரியதரிசியாகவும், 5 பேர்கள் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

சோனாபட்டு திராவிடர் கழகத்தின் இரண்டாம் ஆண்டு ஆட்சிக் குழுவினர் தேர்வு 15-2-45-ந் தேதி தோழர் வெ. மு. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சு. ப. முருகைபா தலைவராகவும், மு. விசுவநாதன் செயலாளராகவும், 5 பேர் நிறைவேற்றுக் கழகத்தார்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பின்னர் தோழர் சி. டி. நாயகம் பிரிவைக் குறித்து ஒரு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

4-1-45-ந் தேதி வாடிக்காடு வெ. வெங்கடாசலம் தலைமையில் கூடிய மதுக்கூர் திராவிடர் கழக அங்கத்தினர் கூட்டத்தில், சேலம் மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின் தோழர்கள் நாகை சாளியப்பன் தலைவராகவும், வெ. வெங்கடாஜலம் துணைத் தலைவராகவும், எ. சாமய்யா காரியதரிசியாகவும் பொருளாளராகவும், மற்றும் துணைக் காரியதரிசியும், 9 நிர்வாக உறுப்பினர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

* *

தோழர் எஸ். எஸ். பி. சண்முகம் தலைமையில் கூடிய சாத்தூர் ஜஸ்டிஸ் கமிட்டிக் கூட்டத்தில், சேலம் மாநாட்டுத் தீர்மானத்தின்படி ஷை சங்கத்தை 'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றப்பட்டது. இவ்வருடத்திற்கு தோழர்கள் ஆளவந்தாய் இராமானுசம் தலைவராகவும், பி. நடராசன், இளைசமுத்து கருப்பன் காரியதரிசிகளாகவும், 8 பேர் கமிட்டி மெம்பர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். விருதை தோழர் பி. ஆசைத்தம்பி தலைமையில் சாத்தூர் தாலுகா திராவிடர் தொண்டர் படை மாநாட்டை விரைவில் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

* *

பெங்களூரில் 18-2-45-ந் தேதி கூடிய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில், 'பொது மக்கள் முன்னேற்றக் கழகம் என்றிருந்ததை "திராவிடக் கழகம்" என மாற்றியமைக்கப்பட்டது. தோழர்கள் சி. ரங்கராசு கௌரவ தலைவராகவும், கோவை சீனிவாசன் தலைவராகவும், ந. சவரன் உபதலைவராகவும், பூ. பார்த்தசாரதி, வெ. நாராயணசாமி கூட்டுக்காரியதரிசிகளாகவும், 9-பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

18-2-45ந் தேதி தோழர் ஆர். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற திருச்செங்கோடு திராவிடர் கழகக் கூட்டத்தில், பல தோழர்கள் "வடக்கும் தெற்கும்" என்பதுபற்றி பேசினார். விசேஷ மாநாட்டை கூட்டவேண்டும் என்று பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், சேலம் ஜில்லா திராவிடர் கழகத்திற்கு திருச்செங்கோடு தாலுகாவின் நிர்வாகஸ்தர்களாக தோழர்கள் ஆர். கே. ஆறுமுகம், கே. பரமசிவம், ஆர். வி. பொன்னுசாமி ஆகியவர்களை நியமிக்கும்படி ஜில்லா தலைவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், தோழர் சி. டி. நாயகம் மறைவுக்கும் சேலம் எம். ஆர். சித்தையன் தந்தையின் மறைவுக்கும், திருச்செங்கோடு தோழர்கள் உயர்மணி, என். கே. வரதராஜுலு ஆகி

# உடைத்தெறியுங்கள்

"இளநீலன்"

உடைத்தெறியுங்கள்! எதை? சிறைச்சாலையின் கதவுகளையல்ல! அவைகள் பின்பு கவனிக்கவேண்டிய விஷயங்கள். பின் எதை உடைத்தெறியவேண்டும்? அதுதான் கோவில்களை.

திராவிட வாலிபர்களே! நமது முதற் கடமை கோவில்களை உடைத்தெறிய வேண்டியதே. ஏன்? 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' "கோவில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என பல பழமொழிகள் பண்டைய காலந்தொட்டு ஏன் வழங்கிவருகிறது எனக் கேட்கலாம்? அது ஒருபக்கம் இருக்கட்டும். சாலவும் நன்று என்று சொல்லக்கூடிய ஆலயத்தில் எல்லா திராவிடர்களும் நுழையமுடியாதாமே? இதை பார்க்கும்பொழுதுதான் இந்த உடைத்தெறியுங்கள் என்ற கொள்கை உதயமாகிறது.

எல்லாரையும் கோவிலினுள் அனுமதித்தால் என்ன? கோவில் என்ன

---

...யவர்களின் தந்தைகள் காலமானதற்கு வருந்துவதாக அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

* *

31-12-44-ல் பூந்தோட்டம் திராவிட இளைஞர் கழகத்தின் ஆதரவில் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'புராண ஆபாசம்' என்பது பற்றி பல தோழர்கள் பேசினார்கள். தோழர் செ. தெ. நாயகம் மறைவு பற்றி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

* *

நன்னிலம் திராவிடர் கழக அங்கத்தினர்கள் பொதுக் கூட்டம் 23-2-45-ந் தேதி கூடியது. தோழர்கள் ஆர். தக்ஷிணாமூர்த்தி, து. கோவிந்தராஜலு, கோ. சௌரிராஜன், சே. சையத் முகம்மது ஆகியவர்கள் முறையே தலைவர், உதவி தலைவர், அமைச்சர், பொருளாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* *

30-1-45-ந் தேதி தோழர் டி. சண்முகம் அவர்கள் தலைமையில் சென்னை நகர திராவிட கழகத்தின் கூட்டம் கூடியது. தோழர்கள் டி. சண்முகம் தலைவராகவும், டி. எம். பார்த்தசாரதி, டி. ஏ. எஸ். சாமி பி. ஏ., பி. எல்., எம். ஹிருதயநாதன், சத்தியவாணி முத்து அம்மையார் ஆகியவர்கள் உதவித் தலைவராகவும், கெ. கோவிந்தசாமி பொருளாளராகவும், என். வி. நடராசன் பொதுக் காரியதரிசியாகவும், எஸ். எம். சுப்ரமணியம், சி. கணேசன், சி. தங்கராஜு, எம். எஸ். மொஹிதீன் ஆகியவர்கள் கூட்டுக் காரியதரிசிகளாகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கெட்டாபோகிறது. ஒரு சமூகத்தாரை மட்டும் அனுமதிக்கும் கடவுள் பிற மதத்தினரை மட்டும் ஏன் அனுமதிப்பதில்லை. அந்த ஒருசமூகத்தாருக்குமட்டும் தனி சார்பு காட்டும் கடவுளை உடைத்தெறிந்தால்தான் என்ன? சற்றே யோசித்துப் பாருங்கள். இன்றைக்கும் பாருங்களேன், சுவாமிமலை என்ற ஊருக்கு போய் பாருங்கள்! அங்கு "சாணார்கள் உள்ளே அனுமதிக்கப்படாது" என்று கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கிறது. இன்றும் திருநெல்வேலி ஜில்லாவில் உள்ள திருச்செந்தூரில் பாருங்களேன்? அங்கும் சிலர் உள்ளே போகக்கூடாதாம். ஆனால் போகக்கூடாது என்று சொல்லும் வகுப்பாரிடமிருந்து மானியமாகவும் உண்டியலாகவும், காணிக்கையாகவும், செலுத்தும் பணம் சொத்து, நிலம், புலம் எல்லாம் அந்த கடவுள் ஏற்றுக்கொள்ளுமாம். ஆனால் அந்த வகுப்பார்கள் மட்டும் உள்ளே நுழையக்கூடாதாம், என்ன மதியீனம் பாருங்கள். பாழும் பார்ப்பனர்கள் மட்டும், பிறர் கொடுக்கும் பணம் காணிக்கைகள் எல்லாம் எப்படியிட்டு சுகமாய் இருக்கலாமா?

சென்ற 25-2-45 ஞாயிற்றுக்கிழமை திருச்செந்தூரில் நாடார் சமூகத்தினர் காவடிகள் எடுத்துச்சென்றார்கள். உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அனுமதிக்கும்படி கேட்டார்கள். பார்ப்பனர்கள் இதற்கு சிறிதும் இடங்கொடுக்கவில்லை. காவடி எடுத்து சென்றவர்களையும், அவர்களுடன் வந்திருந்த பொது மக்களையும் கோவிலுனுள் நுழையவிடாமல் அடித்துத் துரத்தினார்கள். இது கண்டு ஆத்திரமடைந்த நாடார் வகுப்பின் தோழர்கள் ஆவேசம் கொண்டு தாக்கியவர்களைத் தாக்கினார்கள். இதனால் பொது மக்களுக்கும் பங்கம் வந்து சேர்ந்தது. இந்தக் கோவிலில் நாடார் வகுப்பினர் செலுத்தும் பணத்தை மட்டும் ஏற்றுக்கொள்ளும் கடவுள் பணம் செலுத்துபவர்களை மட்டும் ஏன் அனுமதிக்கவில்லை? இப்படி அக்கிரமமாய் நடக்கும் கடவுள்களின் சிலைகளையும் அவைகளின் கோவில் கட்டிடங்களையும் உடைத்தெறிந்தால் குற்றமா?

குளித்து ஒருவாரத்துக்கு மேல் இருக்கும் தேகங்களையும், அழுக்கே உருவாகக்கொண்ட உடைகளையும் அணிந்து, பூணூல் படிந்த முறுக்கு நூல்களையும் உடம்பில் அணிந்துகொண்டு ஆபாசமாய் வாழ்க்கை நடத்திப் பணம் வாங்கும் பார்ப்பனர்கள் மட்டும் ஆபாசமாக உள்ளே கோவிலுக்குள் நுழைகிறார்கள். ஆனால் மேலே கூறும் சம்பவங்கள் திருச்செந்தூரில் இன்றுவரை நடைபெறுகிறது. கவர்ன்மெண்டாரின் [illegible] மசோதா நிறைவேற்றி சிற்சில இடங்களில் தீவிரமாய் வேலை செய்கிறார்கள், ஆனால், இந்தப் பார்ப்பனர்களுக்கு மட்டும் விதிவிலக்கு போலும். ஒருவேளை சுவாமிகளின் அடியார்களுக்கு மட்டும் தனி உரிமை போலும். என்னவோ? இப்பேர்ப்பட்ட வீண் அடியார்களுக்கு மட்டும் அனுமதியாம், கோவிலில் தண்டச்சாப்பாடாம் இது என்ன? நடுங்கும் ரேசன் காலமாய் இருக்கும் சமயத்தில் கோவில்களுக்கு மட்டும் ஆகாரங்களுக்கு என சாப்பாட்டுக்கு நெல், பூசைக்கு குடம்! இது எல்லாம் வீண் செய்கை. சாப்பாட்டுக்குக் கிடைக்காத பஞ்ச காலத்தில் இப்படி கோவில்களுக்குத் தனி நெல் கோட்டா கொடுப்பது உசிதமல்ல. இதை சர்க்கார் கவனிப்பார்கள் என நம்புகிறோம்.

கும்பகோணத்திலே லட்சம் ஜனங்கள், குளத்திலே குளித்தார்கள் என பத்திரிகைகளில் செய்திவருகிறது. இந்த லட்சம் ஜனங்களும் எவ்விதம் சாப்பாட்டுக்கு சரிக்கட்டினார்கள் எனத் தெரியவில்லை. இப்படி சாப்பாட்டுக்கும், பிரயாணத்திற்கும் கஷ்டமான காலத்தில், வீண் பணம் செலவழித்து ஏன் பொது மக்கள் கஷ்டத்துக்குள்ளாகுகிறார்கள் எனத் தெரியவில்லை? முதலில் சாப்பாட்டுக் கஷ்டம், பிரயாணக் கஷ்டம் அடுத்தபடி சுகாதாரக் குறைவு. எல்லா கோவில்களிலும் உள்ளே நுழைந்தால், வௌவால் நாற்றம் தான். இதனால் சுகாதாரக் குறைவு அதிகம் இருக்கிறது. இதனால் தான் பிளேக், காலரா, பெரியம்மை போன்ற தொத்து வியாதிகள் அதிகம் பரவுகிறது. நமக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லாதபடி பொது மக்களுக்குப் பங்கமும், பஞ்சமும் விளைவிக்கக் கூடியதும், சுகாதார அமைதியைக் குறைப்பதுமான கோவில்களும் குளங்களும் இருந்து யாது பயன்? அதை உடைத்தெறிவதே நல்லது. [illegible] சோமநாதர் கோவிலை, கஜனி முகமது உடைத்து எறிந்தது என்ற விஷயம் எவ்வளவோ நல்ல காரியம் என இப்பொழுது தெரிகிறது. அவரை நாம் போற்ற வேண்டும்.

கோவில்களையும், சிலைகளையும் உடைத்தெறியவேண்டும், அதில் வரும் வரும்படிகளைக் கொண்டே கோவில்களை பள்ளிக்கூடமாக்கலாம், வைத்திய சாலை வைக்கலாம், தேகப் பயிற்சி சாலை ஏற்படுத்தலாம், கோவில்களைச் சார்ந்த குளங்களையும் தெப்பங்களையும் சீர்திருத்தம் செய்து மக்கள் பெரும் விளையாட்டு இடமாகவும் ஆரோக்கிய மன்றமாகவும் செய்யலாமா? அன்புள்ள திராவிடத் தோழர்களே! இனித்தாமதியாது வேலைப் பிரசாரங்கள் செய்யுங்கள். நாடு முன்னேற்றமடையவேண்டுமானால், கோவில்களைத் தொழிற்சாலைகளாக மாற்றவேண்டும்.

---

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.